30

உ

ஸ்ரீசெந்திலாண்டவன் துணை

ரக்தாக்ஷி வருஷ பலாபலப்படி

காவேரி கொள்ளடத்தின் பிரளயம்

கோயம்புத்தூர், பவானி, சேலம், திருச்சி, ஜில்லாவிலும்

வெள்ளத்தால் மடிந்த விபரீத சிந்து

2-AUG 1924



இஃது

நா. சபாபதி தாசரால்

றியதை

இல், பதிப்பிக்கப்பெற்றது

924 விலை 6 பை.

O-, 1MSD, K
1924.
181243

உ

செந்திலாண்டவன் துணை.

விருத்தம்.

மலைபருகு மைசூரில் மழைதுளிய வாருதிபோல் மன்னி
நிலைகிமிர காவிரியில் ரேரிநெடு கோள்ளடமும் (கங்கை
துலைபதர இதுவரையில் காணுதபிர (நெட்டி வெள்ளம்
சலைபருகு செய்யுள்வழி கா (ளயத்தால் குலைந்தசேதம்
ண இசை உலகரிய கரிதாழ் காப்பே.

சிந்தடி வஞ்சிப்பா.

காவேரியும் கோள்ளடத்தால் கனத்த உயிர் போச்சு
கணக்கதிலா நகர் டவுன்கள் கடல் மயமதாச்சு—கா

1 மைசூரில் மழை பொழிய அருவிதிரண்டோட
மட்டடங்கா பிரளயமே காவிரியில் நீட
மெய்சோர்க டவுன் கிராமம் மிதந்து ஜனம்வாட
மிரண்டுருண்டு மாண்டு பலர் மெய்மரந்தார்சாட

2 பாவமென்றே பார்த்தவர்கள் பதரி அழலாச்சு
பாவை மக்கள் ஆடவர்கள் பதைத்துழன்றோர்
மீச்சு
சாவ விதி வந்ததேன்றே ஜனத்திரளின் பேச்சு
சக[illegible] பொருள் மாடாடும் ஜலத்திலிறையாச்சு

3 கோயம்புத்தூர் ஜில்லாவில் கூடிவெள்ளம் பாய
கோ[illegible]ளித்தே நதிபுரள குடிகளேல்லாம் நோய
மாயம[illegible] ஆயிரத்தேண்ணூர் அதிகம் சாய
மட்[illegible]ங்கா கால்நடைகள் பிரளயத்தில் மாய

4 காவிரி பவானி வொன்றாய் கலக்குமிடம் வேகம்
கரையிலுற்ற கிராமமெல்லாம் கரைசேர்ந்த
யேகம்
நோவேகி மனந்துடிந்தார் நொடிப்பொழுதில்
ஏகம்
நோக்க வெள்ளம் வயரேரிந்தார் குடிகளெல்
லாம் தேகம்

5 நீளமுப்பந்தீர் அடிமேல் நெட்டி ஜலம் முட்டில்
நிறைந்து வந்த திருசைநகர் பிதிர்கலங்க எட்டில்
ஆழமதை அளவெடுக்க ஆச்சுதனைக்கட்டில்
அரித்து வந்த கிராமமதை அறைவதொண்ணு
மட்டில்

18|243

6 வைக்கோல் போர்மேலே மேல்வந்தார் வேதுபாவம்
வாழ்மனையும் மாடாடும் மடிந்த பரிதாபம்
கைய்க்கப்பார் நதி புரண்ட ஈசுரனின் கோபம்
நமனுலகை அடைந்த உயிர் எண்ண வொ
ண்ணு ஏகம்

7 கொள்ளடத்தின் மேபாலம் குலைந்துடையலாச்சு
கோடியின்மேல் தும்பனிக்கு கொண்ட சில
வாச்சு
சல்லி சல்லியாய் பாலம் சக்கைபுரலாச்சு
சர்க்காரோல் கேட்டறந்து சஞ்சலமுண்டா
ச்சு) (கா)

8 பட்டுப் பட்டாடை கவுன்பாவாடை போச்சு
படுக்கும் மெத்தை ஈச்சேர் கட்டில் பலது சென்ற மீச்சு
தட்டுமுட்டும் பெட்டி இருப் தண்ணீரிலாச்சு
தாலி தப்பி வாழ்வதர்க்கே சந்தேக மாச்சு

தட்டார வீதியிலே படலேயா வென்ற மெட்டு.

(1) திருச்சிநகர் வெள்ளப்பிரளயத்தால்
திரைபோல் தெரியவெங்கும்
அறித்து உலசிகுடிகெடுத்த
அடுத்த நகரை எல்லாம்

(2) பெண்டு பிள்ளை தத்தளிய மனைகள்
பேர்மலைபோல் கீழ்விழுக
கண்டோர் வயரேரிந்தார் புலம்பி
கதரிபதரிடவே

(3) சந்தணமரங்களுடன் தேக்கு
சகலவிதமாமரங்கள்
வந்த வணி வணியாய் பார்க்க
வயர்பற்றிவேகுதையோ

(4) மலையோரம் மேய்ந்த பெருந்தேசு
மதயானைக் கூட்ட மொன்று
அலைசேர் பிரளபத்தேகி வந்த
அதிசயத்தை பார்க்கலுற்றூர்

(5) எண்ண வோண்ணு நாடு நகர் களுற்ற
ஏராள கால்நடைகள்
தண்ணீரில் மாண்டு மடிந்து வந்த
தப்பியதும் நூற்றிலோன்றே
(6) கோள்ளடமும் காவேரியும் இடையில்
கோண்ட புண்ணிய ஸ்ரீரேங்கமும்
செல்லரேங்கர்வாடி வானைக் காவல்
ஜேம்புலிங்கர் வீடு சென்றூர்
(7) திருவானைக்காவை வளைத்த வேள்ளம்
தேள்ளி தேருத்தேருவாய்
பேருவாய் குடாக்கடல் போல்வளைய
பேண்டு பிள்ளை வாடலுண்டார்
(8) லாலுகுடிபக்கம் துடந்திருக்கும்
ரஸ்தா கிராமமேலாம்
பாழாய் பரதவித்தார் ஜனங்கள்
பாவம் பகரவோண்ணு
(9) இடுப்புதுணியுடனே ஜனங்கள்
இழந்தார் ஏராளபோருள்
துடுப்புமிலா காவேரி கோள்ளடமும்
துடைத்தோடி சேன்றதுவே
(10) மக்களுடன் பேண்டுகளை ஆனை
மரமேரி தத்தளித்தார்
சிக்கிமரம் பிடுங்கவேண்ர்
ஜேன்மமிழந்தனராம்

காணவேணும் காணவேணும் என்ற மெட்டு.

(1) கோயம்புத்தூரும் பவானி சேலம்—எங்கும்
கொள்ளைபுண்ட வெள்ளமலங்கோலம்—ஆற்றில்
கொண்ட வெள்ளம் முன்னவர்கள் கண்டதில்லை என்று
ஐய குலைந்தார் மனங்களைந்தார்

(2) மேலசிந்தாமணிக்குள் பூர—வெள்ளம்
மீசுரமாய் சீறி நொடிஏர—ஜனம்
மேங்கி தடுமாரி எங்கும் வோங்கிய ஒப்பாரியுடன்
மிரண்டார் கெலி ஆரண்டார்

(3) போலீஸ்லபன் வெள்ளமதில் மூழ்க—அவர்
போட்டசட்டையும் கழட்டாதாழ்க—தங்கள்
புத்திரர் பெண்டுபிள்ளையை பத்திரமாய் காப்பதற்கு
போனார் தயாரானார்

(4) சின்னபாபிள்ளை சத்திரம் ஏகி—அவர்
க்ஷேமமுற்றார் நல்வழிபுண்டாகிட—அங்கும்
சீரிவெள்ளம் நேரிவந்து தேருதல் சொல்லவிருக்கார்
சீராப் முன்னு ஷாராய்

(5) கோட்டை ரயில் டேஷனிலும் பூர—வெள்ளம்
கொந்தளிய ஷெட்டு தெலாமேர—அங்கு
கூடி ஸ்டேஷன் மாஸ்டர் டாக்டர் காடு மினிஸ்பெக்டர்
பங்ளா குமிர ஜலம் திமிர

(6) பங்களாவை விட்ட கன்றுபோனார்—வேரு
பக்கிலெங்கே ரஜாகையுரலானார்—ரயில்
பாதைஎலாம் தூள்பரந்து பாரஉடைப்பாக எங்கும்
பறிய பாதை விறிய

(7) கொள்ளடம் பாலத்தில் வண்டியேக— ஜலம்
கொண்டகணவாயுடையலாக— எல்லாம்
கூட்டுடன்கயிலை சென்றார் நீட்டிய உயிர்பிரிய
கோரம் அர பாரம்

கும்மி.

(1) குமர பாளையத்தில் வேணவீடுவிழ
கூ கூவென் சத்தக்குரல் மிகுந்த
நிமிர பாவானி நகரில் பிரளயம்
நெட்டிவளைத்தே நெருங்வெடுத்த

(2) தீரர்கள் கட்டிய சோரணூர் பாலமே
தேங்கொணா வீழ்ந்த திடுதிடென
வீரர் அநேகர் எமபுரம் சென்றனர்
வீறிய வெள்ளம் விரைவதுர

(3) சம்பரசம்பேட்டை நொச்சியத்துள்ளும் நம்
காவேரி சென்றே கலங்கவைத்த
தெம்புற்ற கொள்ளடம் பாலம் தூள்பற்றிட
தீர்த்தவாரிக் கிரையானதுவே.

(4) தேவதானம் பறச்சேரி மூழ்கிட
சேத விபரம் தெரியவில்லை
பாவம் கடவுள் நம் மேழைபடுந் துயர்
பார்த்தும் பாராதென்ன பாதகமோ

(5) ஆதித்திராவிடர் வாழ்தெரு மூழ்கிய
அப்புர மேகி அவர்களெல்லாம்
ஈதியிலாது பொருள்களை போட்டுடன்
ஈற்றிசையாலும் வெளியானார்

(6) மாமலைபோல் விழும் வீடுகள் தன்னை
மதிப்பிடவொண்ணு மனவருத்தம்
ஜாமான் பலதுடன் சக்கிலியத்தெரு
ஜாடாய் முழுகி, தயங்குதையோ

(7) பெண்பாடசாலையை சுற்றிவளைத்திட
பெண்களெல்லோரும் கெலிதந்து
தன்உயிர் தப்பிட மாடிமேலேரியே
தப்பிடதன் தன்உயிர் பிழைத்தார்

(8) நேரதாய் இன்னும் அநேக இடங்களில்
தேர்ந்தது வெள்ள நிகழ்சியதே
சோரனூர் கொச்சி லையன்களுடைந்திட
சொல்லொணு நஷ்டமே சூழ்ந்துவிட்ட

(9) கல்பாத்தி ஆற்றிலும் முப்பதடி தண்ணீர்
கப்பி நிலமை கவலைசெய்த
பற்பல சேதமே பாலக்காடெங்கிலும்
பார மழை பெய்த பாதகமே

(10) கும்பகோணம் லயன் சல்வி சல்வியா
கூடிவரும் ரயில் யாவையுமே
பம்பலாய்வந்து திருவாரூர் மார்க்கமாய்
பாசாகிபோவ தோர்பாக்கியமே

(11) பாவலர் மெச்சும் விஜயபுர நகர்
பாக்கியன் சபாபதி பாடலிசை
ஆவலாய் வாங்கி விஷயமரிந்திட
ஆறுமுகமும் நமஸ்கரிப்பேன்.

(முற்றிற்று)